# தென்கிழக்காசியாவின் ஆகப் பெரிய நிலத்தடி துணை மின்நிலையம் சிங்கப்பூரில் அமைகிறது



லேப்ரடார் பகுதியில் எஸ்பி குழுமத்தின் நிலத்தடி துணை மின்நிலையத்தை அமைக்கும் பணிகள் 2024ஆம் ஆண்டில் நிறைவுபெறும். **படம்: எஸ்பி குழுமம்**

தென்கிழக்காசியாவின் ஆகப் பெரிய நிலத்தடி துணை மின்நிலையம் சிங்கப்பூரின் லேப்ரடார் பகுதியில் கட்டப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட மூன்று ஹெக்டர் பரப்பளவில், நான்கு காற்பந்துத் திடல் அளவில் அது உருவாகி வருவதாக எஸ்பி குழுமம் நேற்று அறிவித்தது. நிலப் பற்றாக்குறையைக் கவனத்தில் கொண்டு இந்தப் பெரிய மின்நிலையத்தை நிலத்தடியில் நிறுவ முடிவு செய்யப்பட்டது.

சிங்கப்பூரின் முதலாவது பெரிய துணை மின்நிலையமான அதன் மேற்பரப்பில் 34 மாடிகளைக் கொண்ட வர்த்தகக் கட்டடம் ஒன்று கட்டப்பட உள்ளது.

மின்விநியோகத் துணை நிலையமும் வர்த்தகக் கட்டடமும் இதற்கு முன்னர் பாசிர் பாஞ்சாங் மின்சார வட்டமாகப் பயன்பட்டு வந்த இடத்தில் அமைய உள்ளன. இவ்விரண்டின் கட்டுமானப் பணிகளையும் 2024ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

230 கிலோவாட் மின்சாரத்திற்கான கட்டடத்தின் அடிப்படைக் குத்தகையை 'ஹியுண்டாய் இன்ஜினியரிங் அண்ட் கன்ஸ்ட்ரக்ஷன்' நிறுவனத்திடம் எஸ்பி குழுமம் வழங்கி உள்ளது.

சிங்கப்பூரின் நகர்ப்புற புதுப்பிப்புத் திட்டங்களுக்கு இணங்கவும் நம்பகத்தன்மையுடன் நீடித்து நிலைத்திருக்கும் எரிசக்தி எல்லாருக்கும் கிடைப்பதை உறுதி செய்வதற்கான எஸ்பி குழுமத்தின் சொந்த இலக்கை நிறைவேற்றும் பொருட்டும் இந்த துணை மின்நிலையம் அமைவதாக குழுமத்தின் தலைமை நிர்வாகி ஸ்டேன்லி ஹுவாங் கூறினார்.

பயனாளர்களுக்கு உயரழுத்த மின்சாரத்தை எளிதில் விநியோக்கும் வகையில் குறைந்த அழுத்த மின்சாரமாக மாற்றும் பணியை துணை மின்நிலையங்கள் முக்கியமாக மேற்கொள்ளும். மேலும், வீடுகள், வர்த்தகக் கட்டடங்கள் மற்றும் பொது சேவைகளுக்கான அத்தியாவசிய உள்கட்டமைப்பின் ஒரு பகுதியே இத்தகைய மின்நிலையங்கள்.

இப்போது உருவாகும் லேப்ரடார் துணை மின்நிலையம், அதன் அருகில் உள்ள அலெக்சாண்டிரா, கிளமெண்டி, கெப்பல், பாசிர் பாஞ்சாங் மற்றும் அறிவியல் பூங்கா போன்ற வட்டாரங்களுக்கான மின்தேவையைப் பூர்த்தி செய்யும்.

நிலத்தடியில் துணை மின்நிலையத்தை அமைப்பது என்பது அதிக வளத்திரட்டு முயற்சி என்றும் அதற்குத் தனித்துவமான பொறியியல் திறன்கள் தேவைப்படும் என்றும் எஸ்பி குழுமம் தெரிவித்துள்ளது.

வெப்பம் சேராமல் தடுப்பதற்காக குளிரூட்டிக் கருவிகள் பொருத்தப்படுவதால் துணை மின்நிலையத்தில் தீப்பற்றுவதற்கான அபாயமும் குறைவாக இருக்கும்.

“நிலத்தடியில் கட்டப்படுவதால் நிலத்தின் மேற்பரப்பு மற்ற நோக்கங்களுக்குப் பயன்படும் என்பதோடு துணை மின்நிலையம் சேதம் அடைவதற்கான ஆபத்துகளும் குறைவு. இதன்மூலம் சொத்து மற்றும் கட்டமைப்பின் பாதுகாப்பு மேம்படும்,” என்று குழுமம் கூறியது.

இந்தத் துணை மின்நிலையத்தை உருவாக்கும்போது கிட்டும் அனுபவங்கள் இதுபோன்ற மேலும் பல நிலத்தடி நிலையங்களை அமைக்கும்போது பயன்படுத்திக் கொள்ளப்படும் என்று திரு ஹுவாங் தெரிவித்துள்ளார்.